மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், காங்கயம்

<u>அசல் வழக்கு எண்.99/2021</u>

2025ம் ஆண்டு நவம்பர் 12ம் நாள் புதன்கிழமை வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு சட்டத்தின் ஏற்பாட்டின்படி திருமதி.கே.எஸ்.மாலதி, பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | செல்வராஜ் | தொழில் | |
| த/பெ | | ஊர் | |
| வயது | | தாலுாக்கா | காங்கேயம் |
| மதம் | இந்து | மாவட்டம் | திருப்பூர் |

<u>12.11.2025 பி.வா.சா.2 ஆஜர் சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. வழக்கு விபரங்கள் எனக்கு யார் சொல்லி தெரியும் என்றால் முதலிலேயே தெரியும் குமாரசாமி சொல்லியும் தெரியும். இன்று நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்க என்னை குமாரசாமி தான் அழைத்து வந்தாரா என்றால் ஆமாம். தாவா சொத்திற்கு அருகில் எனக்கு சொத்துக்கள் உள்ளதாக நான் சொல்லியுள்ள சொத்தின் சர்வே எண் என்ன என்றால் சர்வே எண் ஞாபகம் இல்லை. தாவா சொத்திற்கு அருகில் எனக்கு சொத்துக்கள் உள்ளது என்பதை காண்பிக்க நான் ஆவணங்கள் எதையும் கொடுக்கவில்லை என்றால் சரிதான்.

2. வழக்கு நடக்கும் சொத்தின் சர்வே எண் எனக்கு தெரியுமா என்றால் அது எனக்கு தெரியாது. தாவா சொத்தின் மொத்த விஸ்தீரணம் எனக்கு தெரியுமா என்றால் விஸ்தீரணம் தெரியாது மொத்தமாக ஓட்டி

வருகிறார்கள். வழக்கு சொத்துக்கள் சம்பந்தமாக ஏதேனும் ஆவணங்களை நான் பார்த்துள்ளேனா என்றால் இல்லை. தாவா சொத்துக்கள் ஆதியில் யார் வசம் இருந்தது என்றால் குமாரசாமியின் முத்துசாமியும் தான் ஓட்டி வருகிறார்கள். அதற்கு முன் யாருக்கு பாத்தியப்பட்டிருந்தது என்பது எனக்கு தெரியாது. முத்துசாமிக்கு சொத்துக்கள் கிரைய வகையில் பாத்தியமா அல்லது பூர்வீகமாக பாத்தியமா என்றால் அது சம்பந்தமாக எனக்கு தெரியாது. முத்துசாமி தற்போது உயிருடன் இல்லை என்றால் ஆமாம்.

3. முத்துசாமியின் வாரிசுகள் ஆவணங்கள் ஏதேனும் ஏற்படுத்தியுள்ளார்களா என்பது சம்பந்தமாக எனக்கு தெரியுமா என்றால் அது எனக்கு தெரியாது. அந்த ஆவணங்களில் நான் சாட்சியாக எதுவும் கையொப்பம் செய்திருக்கவில்லை என்றால் ஆமாம். தாவா சொத்தில் கிணறு எந்த இடத்தில் அமைந்துள்ளது என்பது சம்பந்தமாக எனக்கு தெரியுமா என்றால் இரண்டு கிணறுகள் உள்ளது. ஒரு கிணறு மூடி கிடக்கிறது. ஒரு கிணற்றில் மட்டும் சர்வீஸ் உள்ளது. தாவா சொத்தில் வீடுகள் எதுவும் இல்லை. இந்த வழக்கு போட்டுள்ள சேர்மலை போயன் என்பவரின் வாரிசுகள் பற்றி எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நான் வட்டமலை கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். வட்டமலை கிராமத்தில் எனக்கு பூமி, வீடு உள்ளது என்றால் ஆமாம்.

4. வழக்கு சொத்துக்கள் சம்பந்தமாகவோ வழக்கு சொத்துக்கள் சம்பந்தமாக ஏற்பட்ட ஆவணங்கள் சம்பந்தமாகவோ எனக்கு எதுவும் தெரியாது என்றும் குமாரசாமி சொல்லிக் கொடுத்ததன் அடிப்படையில் நான் அவர்களுக்கு ஆதரவாக இந்த வழக்கில் பொய்யாக சாட்சியம்

அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. தாவா சொத்து சம்பந்தமாக ஏற்பட்ட ஆவணங்கள் மற்றும் தாவா சொத்தின் அனுபவம் ஆகியவற்றை மறைத்து குமாரசாமி சொல்லிக் கொடுத்ததன் அடிப்படையில் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. மறு விசாரணை இல்லை.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் சரிபார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கைரேகை செய்தும்/கையொப்பம் செய்தும் ஒப்புக்கொள்ளப்படுகிறது.

K S MALATHI

Digitally signed by K S MALATHI
Date: 2025.11.12 18:53:11 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம்